Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 54

திங்கட்கிழமை
19 ஜனவரி 2026

தை 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## கசிப்பு விற்பனை; சந்தேகநபர் கைது

விரிவு பக்கம்:-02

இலங்கையில் நடந்த மோதல்களில்

# கொடூர மீறல்கள் நடந்ததை உறுதிசெய்த ஐ.நா. அறிக்கை

அடுத்த கட்ட நடவடிக்கைகளை இணைந்து ஆராய

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஜன.19**

**இலங்கையில் மோதல்களின்போது பாலியல் வன்முறைகள் உட்பட மீறல்கள் உண்மையிலேயே நிகழ்ந்திருக்கின்றன என்பது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் புதிய அறிக்கை மூலம் நிரூபணமாகியுள்ளது.**

»11

## கல்விச் சீர்திருத்தச் சிக்கல்; தீர்க்கும் நடவடிக்கை துரிதம்

அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஜன.19

புதிய கல்விச் சீர்திருத்தங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து மாணவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். கண்டிக்கு நேற்றுச்

»11

## வடக்கு மார்க்க ரயில் தடம் திருத்தப்பணிக்காக மூடல்

கொழும்பு, ஜன.19

சீரமைப்பு நடவடிக்கைகளுக்காக வடக்கு ரயில் தடத்தின் பல இடங்களைத் தற்காலிகமாக இன்று முதல் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் மஹவ - அநுராதபுரம் இடையிலான ரயில் தடம் தற்காலிகமாக மூடப்படும் என ரயில்வே பொது முகாமையாளர் ரவீந்திர பத்மபிரிய தெரிவித்துள்ளார். எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் மஹவ - ஓமந்தை வரையிலான ரயில் தடமும் மூடப்படவுள்ளது.

அதேவேளை, மதவாச்சி

»10

## புதிய அரசியல் யாப்புக்காக கட்சிகள் ஒன்றுபட வேண்டும்

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தெரிவிப்பு

வவுனியா, ஜன.19

புதிய அரசியல் யாப்பில் தமிழ் மக்களுக்கு ஏதுவான ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணியின் பிரமுகர்

»11

நாடாளுமன்ற உறுப்பினர்களின்

## ஓய்வூதிய இரத்துச்சட்டவரைவை சவாலுக்கு உட்படுத்தி மனுக்கள்!

கொழும்பு, ஜன.19

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியச் சட்டத்தை இரத்து செய்வதற்காகமுன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டவரைவைச் சவாலுக்கு உட்படுத்தி, உயர் நீதிமன்றத்தில் இரண்டு விசேட தீர்மான

»11

62அரச காணிகளிலிருந்து

## குடும்பங்களை வெளியேற உத்தரவு

விரிவு பக்கம்:-04

## விசுவமடுவில் சட்டவிரோதமாக தறிக்கப்படும் பெரு மரங்கள்!

உடனடியாகத் தடுக்க

பிரதேச மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.19

புதுக்குடியிருப்புப்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடுவில் பெறுமதிமிக்க மரங்கள் சட்டவிரோதமான முறையில் வெட்டிச் செல்லப்படுவது அதிகரித்துள்ளது என்றுகுற்றஞ்சாட்டப்படுகின்றது.

மக்கள் குடியிருப்புக்கள், பொது இடங்கள், நெத்தலி ஆறுப் பகுதிகளில் இரவு வேளைகளில் சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்படுகின்றன என்று பிரதேச மக்கள்சுட்டிக்காட்டு கின்றனர்.

»10

## விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் நேற்று மாலை நடந்த விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

கப் ரக வாகனமும்,

»11



“இப்பிடி எத்தனை பேர் படிக்கிறமாதிரி நடிச்சிருக்கினமெண்டது கடவுளுக்குத்தான் வெளிச்சம் கண்டியளோ”

முரசந்தி முரளி

## இல்லாத இனவாதத்தை பேசுவதாலேயே சிக்கல்

இப்படிக் கூறுகின்றது

ஐக்கிய மக்கள் சக்தி



கொழும்பு, ஜன.19

இலங்கையில் அனைத்து இன மக்களும் நல்லிணக்கத்துடனேயே வாழ்கின்றனர். நாட்டில் இல்லாத இனவாதம் தொடர்பாகக் கதைப்பதுதான் இங்குள்ள பிரச்சினை என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய

»11

'3 எஸ்' பெறுபேற்றுடன்

## யாழ். மருத்துவபீடத்தை ஏமாற்றிய கில்லாடி யுவதி!

இரு மாதங்கள் கற்றவர்

கடந்தவாரம் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜன.19

மருத்துவபீடத்துக்கு தெரிவாகாத - அதற்கான தகுதிகள் இல்லாத யுவதி ஒருவர் யாழ்ப்பாணம் மருத்துவபீடத்தில் கல்வி கற்றுவந்துள்ளார் என்பது கடந்தவாரம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த விவகாரம் கல்விச் சமூகத்தினரிடையே பெரும் அதிர்ச்சியை

»11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 18.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4320 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 01 29 38 45 |
| விசேட எழுத்து | X |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 18.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1387 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 02 17 33 59 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 18.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0346 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 7 5 7 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 18.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2426 |
| ஆங்கில எழுத்து | A |
| சுப்பர் இலக்கம் | 21 |
| வெற்றி இலக்கங்கள் | 12 20 48 74 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 18.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6078 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 4 5 1 3 2 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 18.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2108 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 01 06 33 36 |
| விசேட எழுத்து | L |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 18.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0194 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 31 66 |

# காணாமலாக்கப்பட்டோரில் ஆஸி. அதிகளவு கரிசனை!

## ஜனாதிபதியுடன் உரையாடுவோம் என தூதுவர் மத்தியூ டக்வேர்த் வாக்குறுதி

**கொழும்பு, ஜன. 19**

**இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் அவுஸ்திரேலியா கூடுதலான கரிசனை கொண்டுள்ளது என்று அவுஸ்திரேலியத் தூதுவர் டக்வேர்த் தெரிவித்துள்ளார்.**

அண்மையில் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அவுஸ்திரேலியத் தூதுவர் டக்வேர்த், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளார். இதன்போதே, இலங்கையில் இறுதிப்போரின்போது காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தமது அரசாங்கம் அதிக கவனம் கொண்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தமிழ் மக்களிடம் உள்ள கரிசனையை அவுஸ்திரேலியா புரிந்துகொள்கின்றது. ஆதலால், இந்த விடயத்தில் நாங்கள் அக்கறையுடன் செயற்படுவோம். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில், ஜனாதிபதி அநுரகுமாரவுடன் விரைவில் கலந்துரையாடலை மேற்கொள்வோம் என்றும் அவுஸ்திரேலியத் தூதுவர் டக்வேர்த் தெரிவித்துள்ளார்.

இதன்போது, ஜனாதிபதி அநுரவின் ஆட்சியிலும் தமக்கு நீதி மறுக்கப்படுகின்றது என்ற விடயத்தை, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அவுஸ்திரேலியத் தூதுவரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

அத்துடன், சர்வதேசப் பொறிமுறைகள் ஊடாகவே இலங்கைக்கு எதிராக விசாரணைகள் இடம்பெறவேண்டும் என்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மேலும் கூறியுள்ளனர். (ம)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | 18.01.2026 | |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை | |
| வெற்றி வாரம் | 0786 | |
| ஆங்கில எழுத்து | F | |
| வெற்றி இலக்கம் | 5 0 6 2 6 2 | |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 18.01.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3052 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 24 36 44 61 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 18.01.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கம் | 01 02 47 69 |
| வெற்றி வாரம் | 5213 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 18.01.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0882 |
| வெற்றி இலக்கம் | 02 44 47 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 18.01.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| மகரம் | |
| வெற்றி இலக்கம் | 02 11 38 58 |
| சீட்டிழுப்பு வாரம் | 4764 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 18.01.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கம் | 15 41 44 68 |
| வெற்றி வாரம் | 2228 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 18.01.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 21 27 30 43 |
| வெற்றி வாரம் | 2878 |



### முல்லை. தியோகுநகரில்

## வீதிச் சீரின்மையால் பொதுமக்கள் அவதி

### ரவிகரன் எம்.பி. ஆராய்வு

முல்லைத்தீவு, ஜன. 19

முல்லைத்தீவு- கரைதுறைப்பற்றுப் பிரதேசசெயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தியோகுநகர் மற்றும் தீர்த்தக்கரைப் பகுதியில் வசிக்கும் மக்கள், வீதிச் சீரின்மை காரணமாக பெரும் அவதிப்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கொக்கிளாய் பிரதான வீதியிலிணருந்து தியோகுநகர் ஊடாக தீர்த்தக்கரைவரை செல்லும் தாமரைக்குள வீதி நீண்டகாலமாகப் புனரமைப்பு இன்றிக் காணப்படுகின்றது. இதனால், அந்தப் பகுதியில் உள்ள 350க்கும் மேற்பட்ட குடும்பங்களும், பாடசாலை மாணவர்களும், மீனவர்களும் பெரும் இடர்பாட்டை எதிர்கொண்டுவருகின்றனர்.

இதைவிட, சிலாவத்தை தெற்கு மற்றும் தீர்த்தக்கரையிலுள்ள உள்ளக வீதிகள், அனர்த்தம் ஏற்பட்டால் கிராமத்தைவிட்டு வெளியேறும் வீதிகள் என அனைத்து வீதிகளும் சீரின்றிக் காணப்படுவதாகவும் அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதுதொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் முறையிடப்பட்ட நிலையில், அவர் குறித்த வீதிகளுக்கு நேரில் சென்று கள ஆய்வில் ஈடுபட்டார். (ம-246)

## எம்.ஜி.ஆர். பிறந்ததினம் யாழில் கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 19

தமிழக முன்னாள் முதலமைச்சரும், தென்னிந்திய நடிகருமான அமரர் எம்.ஜி. இராமச்சந்திரனின் 109 ஆவது பிறந்ததினம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டது.

கல்வியங்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி. இராமச்சந்திரனின் சிலைக்கு முன்பாக இந்த நிகழ்வு இடம்பெற்றது. எம்.ஜி.ஆரின் சிலைக்கு கல்வியங்காடு வர்த்தக சங்கத் தலைவர் அ.கேதீஸ் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் குடும்பத்தினரால் எம்.ஜி. ஆர். சிலைக்கும், கோப்பாய் சுந்தரலிங்கத்தின் சிலைக்கும் நெய் விளக்குகள் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (க-20)



## கசிப்பு விற்பனை; சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 19

வடமராட்சி துன்னாலை காட்டுப்பகுதியில், நீண்டகாலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுவந்த பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி அரச புலனாய்வுச் சேவைக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, துன்னாலை காட்டுப்பகுதியில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 50 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது. மேலும் சிலர் தப்பியோடிய நிலையில், அவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. (ம-26)



### இலங்கையில் முதன்முறையாக

## கேரள மோகினி நடனம் யாழில் அரங்கேற்றம்!

யாழ்ப்பாணம், ஜன. 19

கேரளாவின் பாரம்பரிய மோகினி நடனம் இலங்கையில் முதன் முறையாக பருத்தித்துறை யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாணவிகளால் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இந்த நடன அரங்கேற்றம் இடம்பெற்றுள்ளது.

நடன ஆசிரியை திருமதி தர்சன் பேபி சர்மிளாவின் நெறியாள்கையில் இந்த அரங்கேற்றம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு விசேட உதவி; ஆராயவருகிறது ஐ.எம்.எப்.

**கொழும்பு, ஜன. 19**
**விசேட உதவித் திட்டங்களை வழங்குவது தொடர்பில், சர்வதேச நாணயநிதியத்தின் நிபுணர் குழுவொன்று மிக விரைவில் இலங்கைக்கு வரவுள்ளது.**


டித்வா புயல் காரணமாக, இலங்கை அண்மையில் பேரழிவைச் சந்தித்தது. இதையடுத்தே, இலங்கையின் எதிர்காலப் பொருளாதாரம் எவ்வாறு அமையும், இலங்கைக்கு எந்த வகையில் உதவிகளை வழங்கலாம் என்பது தொடர்பில் ஆராய்வதற்காக விசேட நிபுணர்கள் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இலங்கையில் விசேட உதவித் திட்டங்கள் இடம்பெறவுள்ளதை நாணயநிதியத்தின் தகவல் தொடர்பு இயக்குநர் ஜூலி உறுதிப்படுத்தியுள்ளார். 'ஆரம்பகட்ட தகவல்களைத் திரட்டுவதற்காகவே நிபுணர்கள் குழு இலங்கைக்குப் பயணிக்கவுள்ளது. எதிர்வரும் மாதங்களிலேயே அடுத்தகட்ட நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படும்' என்றும் அவர் அறிவித்துள்ளார். டித்வா புயலால் ஏற்பட்ட பேரழிவுக்குப் பின்னர், இலங்கைக்கு அவசர அடிப்படையில் நிதி விடுவிப்பை நாணயநிதியம் மேற்கொண்டிருந்தது. இதற்கு மேலதிகமான உதவிக்காகவே நிபுணர்குழு இலங்கைக்குப் பயணிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ரமழான் பண்டிகைக்கு சுற்றறிக்கை வெளியீடு

கொழும்பு, ஜன.19
ரமழான் காலத்தில் மத அனுஷ்டானங்களை நிறைவேற்றுவதற்கான, சிறப்புச் சுற்றறிக்கை பொதுநிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது. இஸ்லாமியர்கள் தங்கள் மதச் சடங்குகளை நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் நிறைவேற்றுவதற்கான பணிமாற்ற ஏற்பாடுகள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன்படி ரமழான் காலமான எதிர்வரும் பெப்ரவரி 19ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை அதிகாலை 3.30 முதல் காலை 6 மணி வரை, மாலை 3.15 முதல் மாலை 4.15 மணி வரை, மாலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை, மாலை 7.30 முதல் இரவு 10.30 மணி வரை விசேட கடமை மாற்ற நடைமுறைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க)



## பயங்கரவாத மாற்றுச்சட்டத்தின் ஆபத்துத் தொடர்பில் ஆராய்வு!

### மன்னாரில் விசேட கலந்துரையாடல்

மன்னார், ஜன.19
பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றீடாகக் கொண்டுவரப்படவுள்ள 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டத்தில்' உள்ள ஆபத்துகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் மன்னாரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு சிவில் ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில்இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. புதிய சட்டம் நாட்டின் பாதுகாப்பை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், பரந்த வரையறைகள் மற்றும் கடுமையான பிரிவுகள் காரணமாக இது பொதுமக்களின் போராட்டங்கள், சிவில் சமூகச் செயற்பாடுகள் மற்றும் புலம்பெயர் சமூகத்தினரை இலக்குவைக்கும் என்று கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன், சமூக ஊடகங்களில் கருத்துத் தெரிவிப்பவர்களும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட வாய்ப்புகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. இதில், சட்டத்தரணி எஸ்.டினேசன் வளவாளராகக் கலந்துகொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-56)



## பி.எஸ்.பாலமுருகனுக்கு சாதனைத்தமிழன் விருது

யாழ்ப்பாணம், ஜன.19
2025ஆம் ஆண்டுக்கான 'சாதனைத் தமிழன்' விருது நாதஸ்வரக் கலைஞர் ஈழ நல்லூர் பி.எஸ்.பாலமுருகனுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம்திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற பொங்கல் திருவிழாவில் இந்த விருது வழங்கப்பட்டது. வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், யாழ்.மாநகரசபையின் முதல்வர் திருமதி வி.மதிவதனி மற்றும் அரசியல் பிரமுகர்கள், சமயப்பிரதிநிதிகள் இணைந்து விருதை வழங்கிக் கௌரவித்தனர். யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு துறையிலும் சாதனை படைக்கும் ஆளுமைகளைத்தெரிவுசெய்து ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-66)

## பேருந்து விபத்தில் சாரதி பரிதாபச்சாவு

கொழும்பு, ஜன.19
கொழும்பில் இருந்து வெலிமடைக்குச் சென்ற தனியார் பேருந்து, ஹல்துமுல்ல பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பேருந்துச் சாரதி உயிரிழந்தார். இந்த விபத்தில் மேலும் ஐவர் காயமடைந்த நிலையில், அவர்கள் அனைவரும் முதற்கட்டச் சிகிச்சைக்குப் பின்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை ஹல்துமுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)




## வெள்ளிக்கிழமை வெளுத்த சாயம்-1

**'அரிது அரிது கம்பஸுக்குப் போறது அரிது, அதனிலும் அரிது மெடிசின் கிடைப்பது அரிது' ஔவையார் உயிரோட இருந்திருந்தால் இப்பிடித்தான் பாடியிருப்பா. அந்தளவுக்கு இஞ்சையுள்ள எல்லாருக்கும் கனவா இருக்கிற 'மருத்துவப் படிப்புக்கு' இடம் கிடைக்கிறது எண்டது லேசுப்பட்ட விசயம் இல்லை. என்னதான் கெட்டிக்காரப் பிள்ளையா இருந்தாலும், எக்ஸாமில கொஞ்சம் கோட்டைவிட்டாலும் அவ்வளவுதான். எத்தினையோ பிள்ளையளுக்கு வெறும் ஒரு மார்க்ஸிலயும், அரை மார்க்கிஸிலையும் கூட உந்த மெடிசின் கிடைக்காமல் போயிருக்குது. இப்பிடி நல்லாப் படிச்சும் அரும்பொட்டில மெடிசின் கிடைக்காமல், உயிரையே மாய்க்கிற அளவுக்கு வாழ்க்கையே கனபேருக்கு மாறியும் இருக்கு. அப்பிடிப்பட்ட நிலைமையில, வெறும் 3 'எஸ்' எடுத்திட்டு, அதுவும் 'சற் ஸ்கோரில' மைனஸில எடுத்த ஒரு பிள்ளை ரண்டு மாதமா எல்லாரையும் பேய்க்காட்டி, மெடிசின் படிச்சிருக்கிறா எண்டதை ஆரும் நம்புவியளோ? உந்தச் சங்கதி வேற எங்கையும் நடக்கேல, எங்கட யாழ்ப்பாணக் கம்பஸிலதான் நடந்திருக்குது.**

**போன நவம்பர் 10ஆம் திகதி மருத்துவ பீடத்துக்கு புதுசா 202 பிள்ளையள் படிக்க வந்தவை. அதில கண்டியில படிச்ச சிங்களப் பிள்ளையொராள், கோர்ஸ் தொடங்கி ரண்டு நாளைக்குப் பிறகு கம்பஸுக்கு வந்திருக்கிறா. நேரா அவா கம்பஸ் ஹொஸ்டலுக்குப் போய், தன்ர பதிவிலக்கம் எண்டு ஒரு நம்பரைச் சொல்லி, காசையும் கட்டி அங்க ரூம் எடுத்திருக்கிறா. அதுக்குப் பிறகு ஒவ்வொருநாளும் மற்றப்பிள்ளையளோட சேர்ந்து அவாவும் லெக்சர்ஸுக்குப் போய் வந்திருக்கிறா. 'இவா எங்கட பட்ஜ்தானே' எண்டு மற்றப் பிள்ளையளும் நினைக்க, 'கண்டியில இருந்து வந்த பிள்ளையெண்டால் கொஞ்சம் கெட்டிக்காரியாத்தான் இருக்கும்' எண்டு லெக்சரர்ஸும் நினைச்சிட்டினம் போல. ஆனால் அந்தப் பிள்ளையின்ர சாயம் போன வெள்ளிக்கிழமையோட வெளுத்துப் போட்டுது. அண்டைக்கு அவைக்கு பிரக்டிக்கல் கிளாஸ் நடந்திருக்குது. ஆய்வுகூட வசதி மட்டுமட்டு எண்டபடியால, வழக்கமா குரூப் குரூப்பாப் பிரிச்சுத்தான் பிரக்டிக்கல் கிளாஸ் எடுப்பினம். அப்பிடிப் பிரிச்சு எல்லாரிட்டையும் சைன் வாங்கேக்கதான், கணக்கு இடிச்சிருக்கு.**

**202 பேர் வரவேண்டிய இடத்தில 203 பேர் நிண்டிருக்கினம். அப்பதான் ஆரந்தக் கறுப்பாடு எண்டு ஆராயேக்கதான், அதுவேற ஆருமில்லை, அந்தச் சிங்களப் பிள்ளைதான் எண்ட விசயம் பிடிபட்டிருக்குது.**

*(மிச்சம் நாளைக்கு )*

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 62 அரச காணிகளிலிருந்து குடும்பங்களை வெளியேற உத்தரவு

## புதுக்குடியிருப்பில் சம்பவம்




**முல்லைத்தீவு, ஜன. 19**

**புதுக்குடியிருப்புப் பிரதேசசெயலர் பிரிவுக்கு உட்பட்ட தேவிபுரம் (அ), தேவிபுரம் (ஆ) ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலும், கோம்பாவில் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட திம்பிலிப் பகுதியிலும் உள்ள அரச காணிகளிலிருந்து, மக்களை வெளியேறுமாறு புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தால் அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன.**

மக்கள் நீண்டகாலமாகக் குடியிருக்கின்ற காணிகள் மற்றும் மக்களால் உப உணவுப் பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்தப்படும் காணிகளில் வசிக்கும் 62 குடும்பங் களுக்கே இந்த வெளியேற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கவனத்துக்கு பாதிக்கப்பட்ட மக்கள் கொண்டு சென்றுள்ளனர். அவர்களிடம் இருந்து எழுத்துமூலமான கோரிக்கைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படும் என்று உறுதியளித்தார். (க-246)



## கைதடி இடிகுண்டுக்குளத்தை புனரமைக்குமாறு கோரிக்கை!

யாழ்ப்பாணம், ஜன. 19

கைதடி இடிகுண்டுக்குளத்தை உடனடியாக புனரமைக்கவேண்டும் என்று பிரதேசசபை உறுப்பினர் க.சிவபாதம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சாவகச்சேரிப் பிரதேசசபை எல்லைக்குள், கைதடி வடக்கு வட்டாரத்தில் அமைந்துள்ள இடிகுண்டுக் குளமானது நிலத்தடிநீரின் பாதுகாப்பு மற்றும் விவசாயிகளின் நலன் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு முழுமையாகத் தூர்வாராப்படவேண்டும். நீண்ட காலம் புனரமைப்பின்றிக் காணப்படும் இந்தக் குளம் தற்போது மண்மோடாக மாறிவருகின்றது. எனவே சாவகச்சேரிப் பிரதேசசபை, விவசாயத் திணைக்களம் மற்றும் தொண்டு நிறுவனங்கள் இதுதொடர்பில் கவனத்தில் எடுத்து குளத்தைப் புனரமைத்து விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்கவேண்டும் -என்றார். (க-159)

## நிர்வாகக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 19

மயிலிட்டி வீரமாணிக்கன் தேவன்துறை கண்ணகி அம்மன் ஆலயப் பரிபாலனசபை நிர்வாகக்கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய வாசலில் இடம்பெறவுள்ளது.

கூட்டத்தில் தைப்பூசத்திருவிழா, பொதுத் திருவிழாக்களுக்கான உத்தேச நிதி, புதிய கோபுரக் கட்டுமானம், அவசர வேலைகளுக்கான நிதி, திருவிழா உபயகாரர்களுக்கான கூட்டம் உட்பட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளன. (க-100)

## பருத்தித்துறையில் தாதியர் சங்கமம்

யாழ்ப்பாணம், ஜன. 19



பருத்தித்துறை ஆதார மருத்துவமனைத் தாதியர்கள் ஒன்றுகூடும் தாதியர் சங்கமம் நிகழ்வு பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை தாதிய உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கத் தலைவர் இ.இராகவன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது, கலைநிகழ்வுகள், விழிப்புணர்வு நாடகம் என்பன அரங்கேறின. தாதிய பட்டதாரிகள், கல்வியில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற மாணவர்கள், கலைநிகழ்வுகளில் பங்கேற்றவர்கள் மற்றும் நிகழ்வு அனுசரணையாளர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றன. மத்திய சுகாதார அமைச்சின் மேனாள் தாதிய கல்விப் பணிப்பாளர் திருமதி வல்லிபுரநாதன், யாழ். தாதிய கல்லூரி அதிபர் எஸ்.ஜெயக்குமார், பருத்தித்துறை ஆதார மருத்துவமனை தாதியர் பரிபாலகி திருமதி முரளிதரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (க-100)

## புதிய மஞ்சம் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 19

புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தில் 1008 சங்காபிஷேகம் மற்றும் புதிய மஞ்ச வெள்ளோட்ட விழா எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றையதினம் காலை 7 மணிக்கு விநாயகப்பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும், நண்பகல் ஒரு மணிக்கு புதிய திருமஞ்ச வெள்ளோட்ட விழாவும் நடைபெற்று, மாலை 7 மணிக்கு வசந்தமண்டப் பூசையைத் தொடர்ந்து புதிய திருமஞ்சத் திருவிழா நடைபெறும். திருவிழாக் காலங்களில் புகழ்பூத்த நாதஸ்வர தவில் வித்துவான்களின் விசேட மேளக்கச்சேரியும் நடைபெறும். (க-20)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். நேரத்துக்குச் சாப்பிட முடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும்.

**மிதுனம்:** மனதில் இனந்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாகமுடியும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணைப் பக்கபலமாக இருப்பார்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை மறுப்பின்றி வாங்கித் தருவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




# தவறுக்கான புள்ளியிடல் தவிர்க்குமா விபத்துகளை?

இலங்கைத்தீவின் வீதிகள் இன்று பயணிகளுக்கான போக்குவரத்து மார்க்கங்களாக அன்றி, மரணத்தின் வாசல்களாக மாறிக்கொண்டிருக்கின்றன. 2026ஆம் ஆண்டின் முதல் பதினான்கு நாள்களில் மட்டும் பதிவாகியுள்ள 73 உயிரிழப்புகள் இந்த அபாயச்சங்கையே ஊதி நிற்கின்றன. இந்த விபரீதப் போக்கைத் தடுத்துநிறுத்தி, வீதி ஒழுக்கத்தை இரும்புக்கரம் கொண்டு நிலைநாட்ட பொலிஸ் திணைக்களம் எடுத்துள்ள 'தவறுக்கான புள்ளிகள்' வழங்கும் (Demerit Points) முறைமையானது, காலங்கடந்தேனும் எடுக்கப்பட்ட ஒரு காத்திரமான முடிவெனச் சொல்லலாம். இந்தப்புதிய நடைமுறையின்கீழ், ஒவ்வொரு சாரதிக்கும் ஒரு குறிப்பிட்ட புள்ளிகள் வழங்கப்பட்டு, அவர்கள் செய்யும் ஒவ்வொரு விதிமீறலுக்கும் அந்தப் புள்ளிகள் குற்றத்தின் தன்மைக்கேற்ப கட்டம் கட்டமாகக் கழிக்கப்படும். இந்தப் புள்ளிகள் ஒரு எல்லையைத் தாண்டுபோது சாரதி அனுமதிப்பத்திரம் தானாகவே செயலிழக்கும். இதனால் பணம் இருந்தால் அபராதம் கட்டிவிட்டுத் தப்பிவிடலாம் என்ற அலட்சியப் போக்குக்கு இந்தமுறைமை முற்றுப்புள்ளி வைக்கும். வீதியில் வாகனம் செலுத்துவதை ஒரு உரிமையாக அன்றி, மிகுந்த பொறுப்புடன் கையாளவேண்டிய ஒரு கடமையாக இது மாற்றியமைக்கும்.

'தவறுக்கான புள்ளிகள்' வழங்கும் முறைமை சீராக நடைமுறைப்படுத்தப்பட்டால், பணபலம் மற்றும் அரசியல் செல்வாக்கைக் கொண்டு வீதி விதிகளைத் தொடர்ந்து மீறுபவர்களுக்கு அது சிம்ம சொப்பனமாக அமையும். மதுபோதையில் வாகனம் செலுத்துதல், அசுர வேகம் மற்றும் உயிரைப் பணயம் வைத்து முந்திச் செல்லுதல் போன்ற குற்றங்களை இழைப்பவர்கள், இனி அபராதத்தாளுடன் வீடு திரும்புவதற்குப் பதிலாகத் தமது சாரதி அனுமதிப்பத்திரத்தையே இழக்க நேரிடும். அத்துடன், பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடி தமது உயிருக்கும், வீதியின் பயணிப்போரின் உயிருக்கும் உலை வைக்க முயலும் சாரதிகள் மீது 'கொலை முயற்சி' வழக்கு பதியப்படும் என்ற எச்சரிக்கை, சட்டத்தின் மாண்பை மீண்டும் நிலைநிறுத்தும்.


அத்தோடு 'தவறுக்கான புள்ளிகள்' வழங்கும் முறைமையில் சில நடைமுறைச்சிக்கல்களும் உண்டு. தொழில்நுட்பரீதியாக மிகவும்பலமானமற்றும்வெளிப்படையான ஒரு கணினிமயப்படுத்தப்பட்ட கட்டமைப்பு இருந்தால் மட்டுமே, 'தவறுக்கான புள்ளிகள்' வழங்கும் முறைமை, ஊழலற்ற விதத்தில் நடைமுறைப்படுத்தப்படும். வீதியோரங்களில் பொலிஸாருக்கும் சாரதிகளுக்குமிடையிலான சட்டவிரோதமான 'பணப் பரிமாற்றங்களுக்கு' இந்தப்புதிய சட்டம் மறைமுக வாய்ப்பாக மாறிவிடக்கூடாது என்பதில் திணைக்களம் விழிப்புடன் இருக்கவேண்டும். அதேநேரம், சிறு தவறுகளுக்காக ஒருவரது வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வண்ணம் மேன்முறையீடு செய்வதற்கான ஜனநாயக இடைவெளிகளும் உறுதிப்படுத்தப்படவேண்டும். வீதிப் பாதுகாப்பு என்பது வெறும் தண்டனைகளால் மட்டுமே கைகூடாது; அது ஒரு சமூகப் பண்பாடாக மாற வேண்டும். எனவே, வரும் ஜூலை மாதம் முதல் அமுலுக்கு வரவுள்ள இந்தப் புதிய முறைமையானது, இலங்கை யின் வீதிகளைப் பிணக்காடுகளாக மாற்றும் அவலத்திற்கு ஒரு முற்றுப்புள்ளியாகவும், ஒழுக்கமான சாரதிப் பரம்பரையை உருவாக்கும் ஒரு புரட்சியாகவும் அமைந் தால் நாட்டுக்கும், மக்களும் நல்லதே. ஆயினும், எந்த வொரு சட்டம் போட்டுத் தடுக்கின்ற கூட்டம் எப்படித் தான் தடுத்தாலும், அதனைத் திட்டம் போட்டு மீறுபவர்கள் இருக்கும் வரை எந்தவொரு திட்டமும் முழுவெற்றியடைவதில்லை. எனவே சாரதிகள் இனியாவது உயிரின் மாண்பை உணர்ந்து பொறுப்போடு சாரத்தியம் செய்தால், எந்தச் சட்டமும் இல்லாமலேயே விபத்துகளைக் குறைக்கமுடியும் என்பதே யதார்த்தம்.



## பொய்யாமொழி

**தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்**
**வானம் வழங்கா தெனின்**

**பொருள்:** இப்பேருலகில் மழை பொய்த்து விடுமானால் அது, பிறர் பொருட்டுச் செய்யும் தானத்திற்கும், தன்பொருட்டு மேற்கொள்ளும் நோன்புக்கும் தடங்கலாகும்.




கல்வித்துறையில்

# நியாயமான மறுசீரமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்



*எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வெளிப்படை*

**கொழும்பு, ஜனவரி 19**

**கல்வித் துறையில் நியாயமான மறுசீரமைப்புகளை மேற்கொண்டால், அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்துள்ளார்.**

பிரதமர் ஹரிணியால் மேற்கொள்ளப்பட்ட கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகள், எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக் காரணமாகத் தற்போது பிற்போடப்பட்டுள்ளன. இதையடுத்தே, 'விரிவான கலந்துரையாடல் மூலம் நியாயமான மறுசீரமைப்பை மேற்கொண்டால் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம்' என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கூறியுள்ளார்.

இலங்கையின் கல்விக் கட்டமைப்பு தவறானது.

அதில் முறையான சீர்திருத்தங்களை பரஸ்பரக் கலந்துரையாடல் மூலம் மேற்கொள்ளவேண்டும் என நான் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றேன்.

எனவே, நாங்கள் சீர்திருத்தங்களை எதிர்க்கும் தரப்பல்ல. மாறாக, தன்னிச்சையான முடிவுகளையும், கல்வியை ஆபாசமாக்குவதையுமே எதிர்க்கிறோம் என்றும் சஜித் தெரிவித்துள்ளார். (க-44)

## முன்னாள் அமைச்சர் நந்தன மறைவு

கொழும்பு, ஜன.19

முன்னாள் அமைச்சர் நந்தன குணதிலக நேற்றுக் காலை ராகம மருத்துவமனையில் காலமானார்.

நீண்டகாலமாக நோய் வாய்ப்பட்டிருந்த அவர் தனது 64ஆவது வயதில் காலமாகியுள்ளார். மக்கள் விடுதலை முன்னணியின் மூலம் அரசியலிலுக்குள் நுழைந்த நந்தன குணதிலக, மக்கள் விடுதலை முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராகவும் போட்டியிட்டார். பின்னர் அந்தக் கட்சியிலிருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## வானிலை சீர்

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சீரான வானிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் அந்தத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

நாட்டில் எதிர்வரும் சில தினங்களுக்குச் சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நுவரெலியா மாவட்டத்தின் சில இடங்களில் அதிகாலை வேளையில் மூடுபனி காணப்படும். கொழும்பு தொடக்கம் புத்தளம் ஊடாக மன்னார் வரையான கடற்பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 45 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்பதால், மீனவர்கள் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம் என்றுள்ளது. (ம)

## இணைய மோசடிக்காக இரு பெண்கள் கைது!

கொழும்பு, ஜன. 19

இணையத்தில் போலி விளம்பரங்களை மேற்கொண்டு, பணமோசடியில் ஈடுபட்ட இரு பெண்கள் மீரிஹான பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



# சிறையில் அடைத்தாலும் அரசியலைக் கைவிடோம்

*நாமல் தெரிவிப்பு*

அநுராதபுரம், ஜன.19

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு ஒருபோதும் அஞ்சப் போவதில்லை. எம்மைச் சிறையில் அடைத்தாலும் அரசியல் பயணம்தொடரும்என்றுநாடாளுமன்ற உறுப்பினர் நாமல் தெரிவித்தார். அநுராதபுரத்தில் இடம்பெற்ற அரசியற்கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். 1988 மற்றும் 1989ஆம் ஆண்டுகளில் போட்ட ஆட்டத்தை எங்களிடம் காட்டவேண்டாம் என்று அரசாங்கத்தினருக்குக் கூறுகின்றோம் என்றும் நாமல் மேலும் தெரிவித்தார். (க-44)




செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காஸா அமைதிச்சபை; ஏற்க இஸ்ரேல் மறுப்பு

டெல்அவிவ், ஜன. 19
அமெரிக்க அதிபர் ட்ரம்பால் உருவாக்கப்பட்டுள்ள காஸா அமைதியைச் சபையை ஏற்க முடியாது என்று, இஸ்ரேலிய பிரதமர் நேதன்யாகு அறிவித்துள்ளார்.

காஸாவில் அடுத்தகட்ட அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகளில் அதிபர் ட்ரம்ப் தற்போது ஈடுபட்டு வருகின்றார். இதற்காக 'அமைதிச் சபை' என்றொரு குழு அவரால் உருவாக்கப்பட்டுள்ளது. அதில், துருக்கி, கட்டார் நாடுகளின் பிரதிநிதிகளும் இடம்பெற்றுள்ளனர். இதையடுத்தே, இந்தத் திட்டத்துக்கு நேதன்யாகு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

துருக்கி, கட்டார் ஆகிய நாடுகள் ஹமாஸ் போராளிகளுக்கு மிகவும் நெருக்கமான தரப்புகளாகவும், ஹமாஸ் போராளிகளை பலப்படுத்தும் நாடுகளாகவும் உள்ளன. எனவே, அவர்கள் அங்கத்துவம் வகிக்கும் அமைதிச் சபையால் இஸ்ரேலுக்குச் சாதகமான வகையில் நீதியை வழங்க முடியாது என்றும் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் உயிருடன் இருப்பதற்குக் காரணமான நாடுகளின் தலையீட்டை நாங்கள் திட்டவட்டமாக நிராகரிக்கின்றோம். எனவே, அமைதிச் சபையில் இருந்து துருக்கி, கட்டார் நாடுகள் நீக்கப்பட வேண்டும் என்று இஸ்ரேலிய பிரதமர் நேதன்யாகு மேலும் கூறியுள்ளார். (ம)

# ரஷ்ய ஏவுகணைகள் பிரான்ஸைத் தாக்கும்

## அதிபர் மக்ரோன் கவலை



பாரிஸ், ஜன. 19
**ரஷ்யாவின் அதிநவீன ஏவுகணைகளால் பிரான்ஸுக்கு எப்போதும் நேரடி அச்சுறுத்தல் உண்டு -என பிரான்ஸின் அதிபர் இம்மனுவல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.**

உக்ரைன் மீது கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளால் ரஷ்யா தாக்குதல் நடத்திவருகின்றது. மூன்று வருடங்களாக இந்தப் போர் இடம்பெறுகின்ற போதிலும், உக்ரைனுக்கு எதிராக அதிநவீன ஏவுகணைகளை அண்மைக் காலமாகவே ரஷ்யா பயன்படுத்திவருகின்றது. இதையடுத்தே, ரஷ்ய ஏவுகணைகளால் பிரான்ஸுக்கு ஆபத்து உள்ளது என அதிபர் மக்ரோன் கூறியுள் ளார்.

பிரான்ஸில் உள்ள பலர், 'ரஷ்யாவால் எமக்கு ஆபத்தில்லை' என்று கடந்த காலங்களில் தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்தனர்.

அவர்கள், ரஷ்யாவின் அண்மைக்கால ஆயுதங்கள் தொடர்பில் அறிந்து கொள்ளவேண்டியது அவசியம். ரஷ்யாவால தற்போது விடுக்கப்படும் செய்திகள் மிகவும் ஆபத்தானவை என்று மக்ரோன் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# மீண்டும் ஜோவெரி

கம்பலா, ஜன. 19
உகண்டாவில் கடந்த 40 ஆண்டுகளாக அதிபராகப் பதவி வகிக்கும் ஜொவெரி முசெவனி, மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார் எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன. உகண்டாவின் ஜனாதிபதித் தேர்தல் அண்மையில் நடைபெற்றது. முசெவனியை எதிர்த்து, தேசிய ஒற்றுமைக் கட்சியின் தலைவர் பொபி வைன் போட்டியிட்டார். இருவருக்கும் இடையில் பலத்த போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 71 வீதமான வாக்குகளைப் பெற்று முசெவனி வெற்றிபெற்றுள்ளார் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

எனினும், இந்தத் தேர்தல் முடிவுகளை பொபி வைன் திட்டவட்டமாக நிராகரித்துள்ளார். அதிபர் ஜொவெரி முசெவனியால் மக்களின் வாக்குகள் திருடப்பட்டுள்ளன. எனவே, பொதுமக்கள் இந்தத் தேர்தல் முடிவுகளுக்கு எதிராக வீதிக்கு இறங்கவேண்டும் என்றும் பொபி வைன் கூறியுள்ளார். (ம)

# கலவரங்களுக்குக் காரணமான குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்

## ஈரானிய உயர்தலைவர் அயதுல்லா தெரிவிப்பு



தெஹ்ரோன், ஜன. 19
ஈரானில் அண்மையில் இடம்பெற்ற கலவரங்களுக்குக் காரணமான சர்வதேசக் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என ஈரானின் உயர்தலைவர் அயதுல்லா அலி கமேனி தெரிவித்துள்ளார்.

ஈரானில் ஆட்சிக்கவிழ்ப்பை மேற்கொள்ளக்கூடிய வகையில் அண்மையில் மக்கள் போராட்டங்கள் வெடித்தன. இந்தப் போராட்டங்கள் இயல்பாக நிகழவில்லை என்றும், சர்வதேசச் சதி காரணமாகவே இடம்பெற்றன எனவும் ஈரானிய உளவுத்துறை கண்டறிந்துள்ளது. குறிப்பாக, அமெரிக்காவின் தஞ்சம் அடைந்துள்ள ஈரானிய இளவரசர் ரேசா பஹ்லவியின் நேரடித் தலையீடு இருந்தமை உறுதியாகியுள்ளது.

இதையடுத்தே, ஈரானில் ஏற்பட்ட கலவரங்களுக்குக் காரணமான சர்வதேசக் குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என்று அயதுல்லா அலி கமேனி தெரிவித்துள்ளார். ஈரானில் நிலைமை இயல்புக்குத் திரும்பியுள்ளது. 'பாரசீக பின்னணியுள்ள இஸ்லாமியக் குடியரசு என்ற நிலையில் இருந்து எவராலும் ஈரானை மாற்றமுடியாது' என்றும் அயதுல்லா அலி கமேனி கூறியுள்ளார்.

இதேவேளை, ஈரானில் கலவரங்களை ஏற்படுத்தவென அனுப்பப்பட்ட பலரைக் கைதுசெய்துள்ளதாக ஈரானியப் படைகள் அறிவித்துள்ளன. அத்துடன், கலவரங்களின் பயன்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட நூற்றுக்கணக்கான ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது. (ம)




# கிறீன்லாந்து விவகாரம் அமெரிக்காவின் திட்டத்தை எதிர்க்கும் நாடுகளுக்கு வரி

## ட்ரம்ப் மற்றொரு அதிரடி

வொஷிங்டன், ஜன. 19
கிறீன்லாந்தைக் கைப்பற்றுவதற்கு ஒத்துழைக்காத நாடுகளுக்கு எதிராக 10 வீத வரிகள் விதிக்கப்படும் என்று, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.

கிறீன்லாந்தைக் கைப்பற்றும் அமெரிக்காவின் திட்டத்துக்கு ஐரோப்பிய நாடுகள் இணைந்து முட்டுக்கட்டை போட்டுள்ளன. கிறீன்லாந்தில் அமெரிக்கா இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டால், பதிலடி கொடுப்பதற்கும் நேட்டோ நாடுகள் உட்பட பல ஐரோப்பிய நாடுகள் படைகளை அனுப்பியுள்ளன.

இதையடுத்தே, கிறீன்லாந்தைக் கைப்பற்றுவதற்கு ஒத்துழைக்காத நாடுகளுக்கு எதிராக 10 வீத வரிகள் விதிக்கப்படும் என்று அதிபர் ட்ரம்ப் கூறியுள்ளார்.

'கிறீன்லாந்து அமெரிக்காவிடம் இருப்பது, அமெரிக்காவுக்கு மட்டும் நன்மை பயக்கும் விடயமல்ல. மாறாக, ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்புக்கும் அது அவசியம்' என்றும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (ம)



# திராவிடக் கூட்டத்தின் சதியில் தமிழக மக்கள் ஏமாறக்கூடாது

## சீமான் கடும் தாக்கு

சென்னை, ஜன. 19
திராவிடக் கட்சிகளின் போலியான வாக்குறுதிகளுக்கு மக்கள் இம்முறை ஏமாறக்கூடாது என, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் பல்வேறு தேர்தல் வாக்குறுதிகளை வழங்கியுள்ளன. அதுதொடர்பில் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளார். இதன்போதே, திராவிடக் கட்சிகளின் போலியான வாக்குறுதிகளை நம்பி மக்கள் ஏமாறக்கூடாது என வலியுறுத்தியுள்ளார். மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்குவரும் அரசுகள், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு பிரதான பங்களிப்பை வழங்கவேண்டும்.

ஆனால், தேர்தல் காலத்தில் கண்கவர் சலுகைகளை வழங்கி வாக்குப் பெறுவதே திராவிடக் கட்சிகளின் திருட்டுத்தனமான திட்டமாக அமைந்துள்ளது என்றும் சீமான் கூறியுள்ளார். (ம)

### ஆபிரிக்க நாடுகளில் கனமழை, வெள்ளம்!

*100 பேர் பலி*

தென் ஆபிரிக்கா, ஜிம்பாப்வே, மொசாம்பிக் ஆகிய 3 நாடுகளில் கடந்த சில நாள்களாக பலத்த மழை பெய்துவருகிறது.

இதனால் பல்வேறு இடங்களில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதில் சிக்கி 100க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். 500க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்புப்பணிகள் நடந்துவருகின்றன. வீட்டுக் கூரைகளில் தவித்தவர்கள் இராணுவ ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்கப்பட்டனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் சாபக்கேடான அரசியல்; அதிலிருந்து மக்கள் மீளவேண்டும்!



## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜன.19**

**கொழும்பில் 'கோட்சூட்' அணிந்துகொண்டு, யாழ்ப்பாணத்தில் வந்து வேட்டியுடன் அரசியல் பேசும் நபர்கள் அரசு முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள். இந்தச் சாபக்கேடான அரசியலில் இருந்து மக்கள் மீளவேண்டும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் யாழ்ப்பாணம் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற 'அகன்று செல்' போதைப்பொருள் ஒழிப்புத் தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளைஞர்களைச் சீரழிக்கும் போதைப்பொருள் விவகாரத்தில் சில அரசியல்வாதிகள் திரைமறைவில் ஆதரவாகச் செயற்படுகின்றனர்.

இந்தத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக்கு தமிழரசுக் கட்சி உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுத்தும், அவர்கள் கலந்துகொள்ளாதது வருத்தமளிக்கின்றது.

கொழும்பில் கோட்சூட் அணிந்துகொண்டு, யாழ்ப்பாணத்தில் வந்து வேட்டியுடன் அரசியல் பேசும் நபர்கள், அரசு முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முட்டுக் கட்டையாக இருக்கிறார்கள். குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் அமையவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கு எதிராக இவர்கள் வழக்குத் தொடர முற்படுவது மக்களின் வளர்ச்சிக்கு எதிரானது.

இந்த நிலையை மாற்றி மக்கள் முன்னேற்றத்தை நோக்கி நகரவேண்டும்.

யாழின் அடையாளத்தைப் பாதுகாத்தல் யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்யும் போது அதன் மரபுரிமை, கலாசாரம் மற்றும் அடையாளங்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பணிகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி எமக்கு விசேடமாக ஆலோசனை வழங்கியுள்ளார். - என்றார். (ச-26)

**பல பொருள் விற்பனை**

- கோம் வீடியோ - LG
- Camera - Sony
- Ladies bike
- கார் கவர் (Car Cover)

தொடர்பு: 077 543 9914

(CS 60502) E

# கேணல் கிட்டுவுக்கு முல்லையில் அஞ்சலி



முல்லைத்தீவு, ஜன.19

விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர் களின் 33ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருவேறு இடங்களில் அண்மையில் இடம்பெற்றன. தேராவில் மாவீரர் துயிலுமில்ல மண்டபத்திலும், மூங்கிலாறு வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. மாவீரர்களுக்கு அகவணக்கம் செலுத்தி, மாவீரர்களின் திருவுருவப் படத்துக்கு சுடர் ஏற்றி, மலர்மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் கேணல் கிட்டு உள்ளிட்ட மாவீரர்களின் நினைவாக மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும், மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றிருந்தார். (சு-246)

**வேலையாட்கள் தேவை**

கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.)
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:077 386 6250

(CS 59300) A

மணி விழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்.



யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் மணிவிழாக்காணும் எங்கள் ஆசிரியர்

**திருமதி தனலெட்சுமி தர்மகுலசிங்கம்**

**(S.L.T.S - I)**

(பயிற்றப்பட்ட விஞ்ஞானம், பட்டப்பின் கல்வி டிப்ளோமா)

எமது கல்லூரியில் அளப்பரிய சேவையாற்றி இன்று (19.01.2026) மணிவிழாக்காணும் ஆசிரியையின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வுகாலம் மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகிறோம்.

**சேவை விபரம்**

- யா/இயற்றாலை அ.மி.த.க பாடசாலை - 24.04.1989 - 04.12.1991
- யா/பலாலி ஆசிரியர் கலாசாலை - 05.02.1991 - 31.12.1992
- யா/இயற்றாலை அ.மி.த.க பாடசாலை - 04.01.1993 - 31.01.1997
- யா/வரணி மத்திய கல்லூரி - 01.02.1997 - 04.01.2004
- யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி - 05.01.2004 - 08.02.2015
- யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி - 09.02.2015 - 18.01.2026

வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

(CR 46919) E

சிவமயம்

**தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்**

**புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ சமர்ப்பண விஞ்ஞாபனம் - 2026**

| கர்மாரம்பம் | எண்ணெய்க்காப்பு | கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 28.01.2026 புதன்கிழமை காலை 7.53 மணி முதல் | 29.01.2026 வியாழக்கிழமை காலை 8.00 - மாலை 3.00 மணி வரை | 30.01.2026 வெள்ளிக்கிழமை காலை 7.32 - 8.06 மணி வரை |

**அம்பாள் அடியார்களே!**

கும்பாபிஷேகத்திலும் அதற்கு முன்னதாக நடைபெறும் கிரியைகளிலும் கலந்துகொண்டு தங்களாலான சிவத்திரவியங்களை கொடுத்தும் அம்பாளின் இஷ்டசித்திகளையும் பெற்று வாழ்வில் சீரும் சிறப்புடனும் வாழ்வீர்களாக.

**மண்டலாபிஷேகமும் அன்னதானமும் 48 நாட்கள் நடைபெறும்.**

இலங்கை வங்கி பருத்தித்துறை
நடைமுறைக் கணக்கு இலக்கம்
**91441040**

தும்பளை நெல்லண்டை
அம்மன் கோவில்
தரும பரிபாலனசபை
தொலைபேசி இலக்கம் : 021 205 6060

(CR 46918) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில் 12 . 12 . 1953



ஆண்டவன் அடியில் 13 . 01 . 2026

இணுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

## திரு.சங்கரப்பிள்ளை அருள்வரதன்

(பட்டயக் கணக்காளர் (Chartered Accountant)

அவர்கள் 13.01.2026 புதன்கிழமை காலமானார்.

பெரியண்ணா!

எங்கள் அன்பு பெரியண்ணாவின் மூச்சு
இன்று மௌனமாய் நின்றுவிட்டது
உங்கள் உடல் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்களை
ஒருநாளும் விட்டுச் செல்லாது
அமைதியாய் உறங்குங்கள் பெரியண்ணா
உடன்பிறவாவிட்டாலும் உங்கள் அன்பு
எங்கள் இதயத்தில் என்றும் உயிருடன்

பெரியண்ணாவின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடைய இணுவில்க் கந்தனை பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்
வேலும் மயிலும் மங்களேஸ்வரி குடும்பத்தினர்
லோகர், லதா, சிவா, லோசி, வதனி

இணுவில்

(CS 46500) E

# மரண அறிவித்தல்

மலர்வு 15 . 05 . 1965



உதிர்வு 17 . 01 . 2026

## சர்வேஸ்வரி ஞானசீலன்

(வைத்திய அதிகாரி - பிரதேச வைத்தியசாலை தலாத்து ஓயா)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கண்டி தலாத்து ஓயாவை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய அதிகாரி சர்வேஸ்வரி ஞானசீலன் அவர்கள் 17.01.2026 அன்று காலமானார்.

அன்னார் தில்லையம்பலம், காலஞ்சென்ற இராசம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சந்திரவதனா தம்பதியினரின் அன்பு மருமகளும், ஞானசீலன் அவர்களின் அன்பு மனைவியும், நிவேதிகா, தர்ஷிகா, துவாரகன் ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், சர்வதயாபரி, சர்வாம்பிகை, சர்வானந்தன், கலைவாணி, சர்வேஸ்வரன் ஆகியோரின சகோதரியும், சாந்தினி, குமுதினி, வடிவாம்பிகா, முரளிதரன், ரவீந்திரன், உலககுருநாதன், சத்தியவதி, வித்தியா, சிவராசன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (19.01.2026) திங்கட்கிழமை 21/12 B, Riverdale Road, Anniewatte, கண்டியில் அமைந்துள்ள வீட்டில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கண்டி மகியாவ மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு
077 780 2433

தகவல்:
ஞானசீலன் பொன்னையா

(CS 60499) E

# மரண அறிவித்தல்



மண்ணில் 10.07.1946

விண்ணில் 17.01.2026

## திருமதி கெங்காலட்சுமி தங்கையா

மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கெங்காலட்சுமி தங்கையா அவர்கள் கடந்த 17.01.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கையாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரன் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னதம்பி - தமலாம்பிகை தம்பதியரின் பாசமிகு மருமகளும், சுஜாதா, காலஞ்சென்ற சுஜீவன், சுதர்சன் மற்றும் கீர்த்திகா, கார்த்திகா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அரசு (றெஜி), சஜிவனி (கொலன்ட்), ஞானாச்சந்திரன் (கனடா), கிரிஸ்சாந்தன் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பபித்திரா, சுலக்சன் (ஆகாஸ் பேக்கரியின் உரிமையாளர்), கௌசிகா (ஜேர்மன்), சர்மிலன் - டிலக்சிகா, டிலக்சன், ஆகாஸ் (ஜேர்மன்), அஸ்வின் (ஜேர்மன்), கிரிஸ் (கொலன்ட்), கரிஸ் (கொலன்ட்), தனிஸ் (கொலன்ட்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், திவிஸ், ஜஸ்விகாவின் பூட்டியும், காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் பவானி, பரசக்தி, அதிரூபராணி, சற்சோரூபி, காலஞ்சென்ற சிவயோகநாதன் மற்றும் புவனேந்திரக்குமார், சிவசரணதேவி, ரவிசாந்தி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சந்திரா, பாலசுப்ரமணியம், நேசராஜா, சிவநாதன் மற்றும் கிருஸ்ணதாசன், சுகிர்தா, வசந்தி, ரட்ணராஜா, செல்வரட்ணம் ஆகியோரின் மைத்துனியும், மயூரன், காலஞ்சென்ற செந்தூரன் மற்றும் கௌதமன், கௌதமி, ரஜீவன், சங்கீதா, சிவசாம்பவி, ராம்குமார், ரசிக்கா, ஐங்கரன், ஆர்த்தி, பிரகாஸ், கஸ்தூரி ஆகியோரின் பெரியம்மாவும், தாரணி, பிரீதீப், முகந்தன், ரகுலா, தீபிகா, சலோம் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2026) திங்கட்கிழமை மதியம் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.

தகவல் :
சுஜாதா - 077 76 06 320
கீத்தா - 077 02 00 540

(CS 31040) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரால் பாதிக்கப்பட்டவர்களில் வீடுகளற்ற அனைவருக்கும் வீடு!

## ஜனாதிபதி யாழில் தெரிவிப்பு

**சாவகச்சேரி,ஜன.19**

**வடக்கு மாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்டு வீடுகளற்று நிர்க்கதியாகியுள்ள அனைவருக்கும் விரைவில் வீட்டு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**


சாவகச்சேரி மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் வீட்டுத் திட்ட மானியத்துக்கான காசோலைகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் நிறைவடைந்து பல காலங்கள் கடந்தாலும் இன்னும் பூர்த்தியடையாத வீட்டுத்திட்டங்களைப் பூர்த்திசெய்யும் முகமாக இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடமாகாண மக்கள் போர்க் காலத்திலும், அதற்குப் பின்னரும் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்துள்ளனர். நீண்ட காலமாகச் சொந்த வீடு இல்லாமல் வாழ்வது இலகுவான விடயம் அல்ல. போரால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் வீட்டு வசதியைப் பெற்றுக்கொடுப்பதே எமது அரசாங்கத்தின் முக்கியமான நோக்கமாகும். கீழ் மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவேண்டும் என்ற நோக்கில் எமது அரசாங்கம் அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் நிவர்த்திசெய்யும்.

மக்களுக்குச் சிறந்த வருமான வழியை ஏற்படுத்தவேண்டும். விசேடமாக யாழ்ப்பாணத்தில் விவசாயத்துறை, சுற்றுலாத்துறை, கடற்றொழிற்றுறை மற்றும் சிறு கைத்தொழிற்றுறை போன்றன மக்களுடைய வாழ்வாதாரமாக இருக்கின்றன. எனவே அனைத்துத் துறைகளையும் மேம்படுத்தவேண்டும். அதேபோன்று சுற்றுலாத்துறை நாட்டுக்குப் பெரிய பங்களிப்பை வழங்குகின்றது.

வடக்கில் அழகிய கடற்கரைகள் மக்களைக் கவரக்கூடிய பல இடங்கள் இருந்தாலும், சக்தி வாய்ந்த சுற்றுலாத்தலம் இங்கு இல்லை. இந்தக்குறைபாடுகளைப் பூர்த்திசெய்யவேண்டும். இங்குள்ள விமானநிலையத்தின் குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு எம்மால் திட்டமிடப்பட்டுள்ளது. காங்கேசன் துறைதுறைமுகத்தைப்புனரமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் -என்றார். (க-27)



## யாழ்.மாநகரசபையில் தைப்பொங்கல் விழா

யாழ்ப்பாணம்.ஜன.19

யாழ்.மாநகரசபையில் தைப்பொங்கல் விழா, மாநகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் முதல்வர் வி.மதிவதனி தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. உரிய முறைப்படி சமய நிகழ்வுகள் இடம்பெற்று, அனைவருக்கும் பொங்கல் பரிமாறப்பட்டது.

நிகழ்வில் மாநகரசபையின் உறுப்பினர்கள், ஆணையாளர், செயலாளர், பிரதம பொறியியலாளர், கணக்காளர், உதவி ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர், கிளை களின் பொறுப்பதிகாரிகள், மாநகர உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்துகொண்டனர். (க)

## 'இஷார' போதைப்பொருள் வலையமைப்பு முறியடிப்பு;

### கம்பளையில் 3 இளைஞர்கள் கைது

கம்பளை, ஜன.19

டுபாயிலிருந்து நாட்டுக்குள் போதைப்பொருள் வலையமைப்பை நடத்தும் 'டுபாய் இஷார' என்ற முக்கியமான போதைப்பொருள் கடத்தல்காரருக்குச் சொந்தமான போதைப் பொருள்களை விற்பனை செய்த மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 5 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் 20 முதல் 22 வயதுக்குட்பட்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது. (ச-இ)

## சாவகச்சேரி பொதுச்சந்தையில் இறைச்சி விற்பனை ஆரம்பம்

சாவகச்சேரி, ஜன.19

கடந்த இரண்டு வாரங்களாக மூடப்பட்டிருந்த சாவகச்சேரி பொதுச்சந்தையின் ஆட்டிறைச்சி மற்றும் மாட்டிறைச்சிக் கடைகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன. 2026ஆம் ஆண்டுக்கான இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்காகச் சாவகச்சேரி நகரசபை யினால் பகிரங்கமாகக் கேள்விகள் கோரப்பட்டிருந்தன. எனினும், ஆரம்பத்தில்எவரும்விண்ணப்பிக்காத காரணத்தால், மீளவும் அறிவித்தல் விடுக்கப்பட்டது. அதன் பின்னரும் விண்ணப்பங்கள் கிடைக்காதநிலையில், கடந்த வாரம் இந்தக் கடைகள் பகிரங்க ஏலத்தில் விடப்பட்டன. நகரசபையினால் நடத்தப்பட்ட இந்த ஏலத்தில் ஆட்டிறைச்சி மற்றும் மாட்டிறைச்சிக் கடைகளை வியாபாரிகள் ஏலத்தில்எடுத்தனர். இதனைத் தொடர்ந்து, நேற்றுமுன்தினம் முதல் மக்களின் பயன்பாட்டுக்காகக் கடைகள் திறக்கப்பட் டுள்ளன. (ச-9)



தைப்பொங்கலை முன்னிட்டுக் கொக்குவில் அஞ்சல் அலுவலகத்தின் பொங்கல் விழா, அஞ்சல் அலுவலகத் தபால் அதிபர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (க-66)





நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் இடம்பெற்றது. இதில் திருவாசகம் பாடிய ஓதுவார்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். (க-[illegible])

## பரிசோதனை முகாமில் பலருக்கு நீரிழிவு கண்டறிவு

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ். நீரிழிவுக் கழகத்தின் பத்தாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு, கல்வியக்காட்டுச் சந்தை வளாகத்தில் நடத்தப்பட்ட இலவச நீரிழிவுப் பரிசோதனை முகாமில், 12 பேருக்கு நீரிழிவு நோய் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வடமாகாண சுதேச வைத்திய திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி சர்வானந்தன் இந்த முகாமை ஆரம்பித்து வைத்தார். சுதேச வைத்திய திணைக்கள வைத்தியர்கள், நீரிழிவுக் கழக அங்கத்தினர் முகாமை நடத்தினர்.

நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தம், உடற்திணிவுச்சுட்டி என்பன இலவசமாகப் பரிசோதிக்கப்பட்டு மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. அத்துடன் நீரிழிவு தொடர்பான கைநூலும் இலவசமாக வழங்கப்பட்டது. நூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள், வர்த்தகர்கள் கலந்துகொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டு பயனடைந்தனர். இவர்களில் 12 பேருக்கு நீரிழிவு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

தலைமன்னார் ரயில் பாதையின் அபிவிருத்திப் பணிகளும் இன்று ஆரம்பிக்கப்படும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.
மஹவ முதல் ஓமந்தை வரையிலான ரயில் தடத்தில் ஐந்து ரயில் பாலங்களை மாற்றியமைக்கவும், யானைகள் கடந்து செல்வதற்காக அமைக்கப்பட்ட சுரங்கப் பாதையை சீரமைக்கும் பணிகளை முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.
எதிர்வரும் தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் ரயில் தடச் சீரமைப்புப் பணிகளை நிறைவு செய்து, வடக்கு - தெற்கு போக்குவரத்தை வழமைபோன்று முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
இன்று முதல் அநுராதபுரம் காங்கேசன்துறைவரையும், 27 ஆம் திகதி முதல் ஓமந்தை - காங்கேசன்துறை வரையும் 'யாழ் ராணி' ரயில் சேவையில் ஈடுபடும் -என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## விசுவமடுவில்...

கடந்த 15ஆம் திகதியும் குடியிருப்புக்குள் நின்ற பெறுமதி மிக்க முதிரை மரங்கள் இவ்வாறு வெட்டப்பட்டுள்ளன. வீட்டு உரிமையாளர் மருத்துவத் தேவைக்காக உறவினர் வீட்டில் தங்கியிருந்த சமயம் இந்த மரங்கள் வெட்டிச் செல்லப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பாகப் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வெட்டப்படும் மரங்கள் நள்ளிரவில் உழவியந்திரங்கள் மூலம் கடத்திச் செல்லப்படுகின்றன என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-எ-113)

### அனைவருக்கும் ஒரேசட்டம் என்றால்

# திஸ்ஸ விகாரையை ஏன் அகற்றவில்லை?

அருட்தந்தை சக்திவேல் கேள்வி

**வவுனியா, ஜன. 19**


**அனைவருக்கும் ஒரே சட்டம் என்றால், திஸ்ஸ விகாரை விடயத்தில் ஏன் அந்தச் சட்டம் நடைமுறையாகவில்லை? இவ்வாறு சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியற்கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.**

அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-
தமிழர் திருநாளில் தமிழர் தாயகத்துக்கு வருகைதந்த ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க, சிங்கள பௌத்த ஆதிக்க இனவாத நோக்கில் கட்டப்பட்ட சட்டவிரோத விகாரைக் கட்டடத்தின் பிக்குவை தனது கூட்டத்தின் முன்வரிசை ஆசனத்தில் அமர்த்தி அழகு பார்த்துள்ளார்.
அத்துடன், இனவாத சட்டவிரோத விகாரைக் கட்டடத்துக்கு எதிராகவும், இராணுவத்தினரின் தனியார் நிலங்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் போராடுபவர்களை இனவாதிகள் என அடையாளப்படுத்தி தமிழர் தாயக மக்களை அவமானப்படுத்தியுள்ளார். இதுதான் தமிழர் திருநாளில் தமிழர்களுக்குக் கொடுத்த பரிசா? எனக் கேட்கவிரும்புகின்றேன்.
தையிட்டி விகாரையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி என்பது, சட்டவிரோத விகாரையை அகற்றி மக்களின் காணிகளை மக்களின் கைகளில் கொடுப்பதாகும்.
தெற்குக்கும் வடக்குக்கும் ஒரே சட்டம் எனக் கூறும் ஜனாதிபதி தற்போதைய விகாரை விடயத்தில் அதனை நிறைவேற்றாது ஏன்? இனவாத, மதவாதத்தின் காலடியில் விழுந்து கிடக்கும் ஒருவர் சொந்தக் காணிகளைக் கேட்டு நடக்கும் போராட்டத்தை இனவாதம் என குறிப்பிடுவதில் என்ன நியாயம் உள்ளது?தமிழர்களோடு விழா கொண்டாட வந்த ஜனாதிபதிதமிழர்களின் அரசியல் பண்பாட்டு விழாவை தனது அரசியல் களியாட்ட விழாவாக்கி மகிழ்ந்துள்ளார் என்பதே உண்மை -என்றுள்ளது. (ம)


### இலங்கையின்

# ஊதா இரத்தினக்கல்லுக்கு உலகளாவிய அங்கீகாரம்!

கொழும்பு, ஜன. 19
இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய ஊதா நட்சத்திர இரத்தினக்கல் உலகளாவிய அறிவியல் மற்றும் கலாசார மேடையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இரத்தினக்கல் மூவாயிரத்து 536 கரட் கொண்டது.
அமெரிக்க இரத்தினவியல் நிறுவனம் மற்றும் லங்கா இரத்தினவியல் ஆய்வகத்தால் இதன் தோற்றம் மற்றும் உண்மைத் தன்மைத் தொடர்பில் சான்றளிக்கப்பட்டுள்ளது. இந்த இரத்தினக்கல் 6 கதிர் நட்சத்திர வடிவத்தில் உள்ளது. இந்த இரத்தினக்கல் மில்லியன் கணக்கான ஆண்டுகளாக இயற்கை புவியியல் செயன்முறைகளால் உருவானதாகவும் இதனைச் செயற்கையாக வடிவமைக்கமுடியாது என்றும், அவ்வாறு உருவாக்கத் தேவையான நிலைகள் மிகவும் அரிதாக இருப்பதாகவும் நிபுணர்கள் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-க)





மன்னார் பேசாலை புனிதவெற்றிநாயகி ஆலயத்தின் கீழ் இயங்கிவரும், சென்.மேரிஸ், அமலதாசன் மற்றும் சென்.விக்ரரிஸ் ஆகிய முன்பள்ளிகளில் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ம-60)



# மனைவியைத் தீ வைத்து எரித்த கணவனுக்கு மரணதண்டனை!

கொழும்பு, ஜன. 19
மனைவியைப் பெற்றோல் ஊற்றி எரித்துக்கொன்ற கணவனுக்கு மொனராகலை மேல் நீதிமன்றால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
மொனராகலை, கெமுனுபுரவைச் சேர்ந்த யடபாலகே நீல் ஸ்டான்லி ஜெயரத்ன என்ற நபருக்கே இவ்வாறு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
அந்த நபர், கடந்த 2017ஆம் ஆண்டு தனது மனைவி கே.எம். சுஜாதாவை எரித்துக்கொன்றுள்ளார். சட்டமா அதிபர் திணைக்களத்தின் குற்றப்பத்திரத்தைத் தொடர்ந்து, இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின் அடிப்படையிலேயே அந்த நபருக்குத் தற்போது மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (க)





யாழ். நீரிழிவுக் கழகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, இலங்கை நீரிழிவுக் கழகத்தால், நீரிழிவு நோய்க்கான ஒரு தொகுதி இன்சுலின் ஊசி மருந்துகள், யாழ்.போதனா மருத்துவமனை நீரிழிவுச் சிகிச்சை நிலையத்துக்கு வழங்கப்பட்டன. இவற்றை நீரிழிவுக் கழக உபதலைவர் திருமதி ச.அம்பிகா, மருத்துவ நிபுணர் ம.அரவிந்தனிடம் கையளித்தார். (க)

# கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் அமாவாசை விரத உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 19
வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் தை அமாவாசை விரத உற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலைஇடம்பெற்றது. காலை 7 மணியளவில் நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமான் பிரசித்தி பெற்ற கீரிமலை கண்டகி தீர்த்தக் கடற்கரைக்கு எழுந்தருளினர். தொடர்ந்து அங்கு தீர்த்தோற்சவம் இடம்பெற்றது. (ம-66)

# தடம்புரண்டு கார் விபத்து மூவர்மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஜன.19
அச்சுவேலி வல்லை பகுதியில் கார் ஒன்று நேற்றுத் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் படுகாயமடைந்தனர்.
யாழ்ப்பாணத்திலிருந்து மந்திகை நோக்கி பயணித்தபோது, வல்லைப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் வீதி அருகில் இருந்த மதகுடன் மோதி தடம்புரண்டுவிபத்துக்குள்ளாகியுள்ளது.
திருநெல்வேலியைச் சேர்ந்த தாயும் தந்தையும், மகளுமே காரில் பயணித்துள்ளனர். விபத்தில் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ00.66)

**மணமகள் தேவை**
சைவம் (V), வயது 34, சமுர்த்தி
உத்தியோகஸ்தர், சுவாதி நட்சத்திரம், துலாராசி,
மணமகனுக்கு படித்த, நற்குணமுள்ள
பொருத்தமான மணமகள் தேவை.
**தொடர்பு:071 666 2001**
(CS 31046 A) A

**மணமகன் தேவை**
சைவம் (V), வயது 32, இடப ராசி,
கார்த்திகை நட்சத்திரம், IT மணமகளுக்கு
பொருத்தமான நற்குணம் உள்ள
மணமகன் தேவை.
**தொடர்பு:071 666 2001**
(CS 31046 B) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடூர...

இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அனைவரும் ஒன்றிணைந்து ஆராயவேண்டும் என்று வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக் கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக் கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் ஆ.லீலாதேவி இது தொடர்பாகத் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின்கீழ் இயங்கும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று வெளியாகியுள்ளது. 'நாங்கள் அனைத்தையும் இழந்துவிட்டோம் நீதி கிட்டும் என்ற நம்பிக்கையைக்கூட இழந்துவிட்டோம்' எனும் தலைப்பிலான 30 பக்க விரிவான அந்த அறிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆயுதமோதலின்போதும், அதன் பின்னரும் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறைகள் வெறுமனே தற்செயலாக அங்கொன்றும், இங்கொன்றுமாக இடம்பெற்ற சம்பவங்கள் அல்ல எனவும், மாறாக அவை வேண்டுமென்றே பரந்துபட்ட ரீதியில் நிகழ்த்தப்பட்ட, முறையாகக் கட்டமைக் கப்பட்ட வன்முறைகளின் ஓரங்கமாகும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி இந்த மீறல்கள் தகவல்களைத் திரட்டுவதற்கும், மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கும், தனிநபர்கள் மற்றும் சமூகங்களை ஒடுக்குவதற்கும், பரவலான அச்ச மற்றும் அவமான உணர்வை வேரூன்றச் செய்வதற்குமான ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் பல்வேறு மனித உரிமை மீறல் நெருக்கடிகள் தலைதூக்கியிருக்கும் சூழ்நிலையில், எமது பிரச்சினைகளை ஐ.நா. மறந்துவிட்டது எனக் கருதியிருந்த வேளையில் இந்த அறிக்கை வெளியானது மகிழ்ச்சியையும், ஆறுதலையும் அளிக்கின்றது.

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட மிகமோசமான அக்கிரமங்கள் இடம்பெற்றதாக நாம் கூறியபோது, அவ்வாறான சம்பவங்கள் நிகழவில்லை எனப் பலரும் மறுத்தார்கள். ஆனால் இப்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையின் மூலம் நாம் கூறிய அனைத்து விடயங்களும் உண்மைஎன்பதுநிரூபணமாகியுள்ளது.

இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அடுத்தகட்டமாக எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்கப்போகிறோம்? இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், சர்வதேச மக்கள் தீர்ப்பாயம், சர்வதேச நீதிமன்றம் போன்ற கட்டமைப்புக்களின் முன்னிலையில் பாரப்படுத்தப்போகிறோமா? அதை எவ்வாறு செய்வது? என்பன தொடர்பில் ஆராயவேண்டும் .

இந்த ஆராய்வு செயன்முறை குறித்தவொரு தரப்பினருக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்படக்கூடாது. பாதிக்கப்பட்ட தரப்பினர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள் என சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் அதில் உள்வாங்கப்பட வேண்டும்-என்றார். (அ-எ-இ)

## இல்லாத...

மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்துக்குச் செல்லும்போது அந்தந்தப் பகுதி மக்களை திருப்திப்படுத்தும் வகையில் ஜனாதிபதி கருத்துகளை முன்வைக்கின்றார்.

இது ஏற்புடையது அல்ல. அரசாங்கத் தலைவர் பொதுக்கொள்கையுடன் பயணிக்க வேண்டும். நாட்டில் எந்தப் பகுதிக்கு சென்றாலும் ஒரே கொள்கை அடிப்படையிலேயே கருத்துகளை முன்வைக்க வேண்டும்.

ஆனால் புலம்பெயர் தமிழர்களைத் திருப்திப்படுத்தும் விதத்திலேயே வடக்குக்குச் சென்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரையாற்றுகின்றார். நாட்டில் அனைத்து இன மக்களும் நல்லிணக்கத்துடன்தான் வாழ்கின்றனர். அதனால் இனவாதத்தை தோற்றுவிக்கும் விதத்தில் கருத்துக்களை எவரும் முன்வைக்கக்கூடாது.

அநுரகுமார திஸாநாயக்க என்பவர் எதிர்க்கட்சித் தலைவர் அல்லர், அவர் நாட்டின் ஜனாதிபதி. ஆகவே, பொறுப்புடன் கருத்துகளை வெளியிட வேண்டும் -என்றார். (அ-எ-44)

## புதிய...

களுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று வவுனியாவில் நடைபெற்றது. அந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. 2026 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. அடுத்த மாதம் கட்சியின் மாநாட்டைக் கூட்டுவதற்கும் தீர்மானித்துள்ளோம்.

காலத்தை வீணடிக்காது மாகாணசபைத் தேர்தலை அரசாங்கம் நடத்த வேண்டும் என்பது எங்களது ஏகோபித்த கோரிக்கையாகும். தமிழரசுக் கட்சி உட்பட ஏனைய தமிழ் கட்சிகளும் மாகாண சபைத் தேர்தலை வைக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். அரசாங்கம் புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதாக இருந்தால், புதிய யாப்பில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக என்ன விடயங்களை உள்ளடக்கப்போகின்றார்என் என்பதைத் தமிழர் தரப்புடன் பேசவேண்டும்.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னனி போன்றன ஒரு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். தீர்வு பொதுவிடயம், தமிழ் மக்களது நலன் சார்ந்த விடயம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களுக்கு ஒத்துவரக் கூடிய ஒரு தீர்வு திட்டத்தை முன்வைக்க வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்படவேண்டும். தற்போது புதிய வடிவத்தில் புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்படுகின்றது. புத்திஜீவிகள் எல்லோரும் அதை நிராகரித்துள்ளார்கள். சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் அதை நிராகரித்துள்ளன. பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். தொடர்ந்தும் தமிழ் தரப்புக்கள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்று தீர்மானித்துள்ளோம் -என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சுரேஷ்பிரேமச்சந்திரன் , மு.சந்திரகுமார், ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் செயலாளர் நா. ரட்ணலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியைச் சேர்ந்த க.துளசி, முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் உட்படப் பலர் கலந்துகொண்டிருந்தனர். (அ-எ-110)

## யாழ்...

ஏற்படுத்தியுள்ளது.

10ஆம் திகதி ஆரம்பமான மருத்துவபீடத்துக்கான புதிய அணியிலேயே கண்டியைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தவரான இந்த யுவதி இணைந்து கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றார்.

செய்முறைப் பரீட்சை ஒன்றில் மாணவர் எண்ணிக்கை சரிபார்க்கப்பட்டபோதே, இந்த யுவதி மருத்துவபீடத்துக்குத் தெரிவாகாதவர் என்பதும், மருத்துவபீடத்துக்குத் தெரிவாவதற்கான அடிப்படை கற்றல் பெறுபேற்றினைக் கொண்டிராதவர் என்பதும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. உயர்தரப் பரீட்சையில் மூன்று சாதாரண சித்திகளை மட்டுமே பெற்றுக்கொண்டுள்ள இந்தப் பெண் விடுதியில் தங்கி நின்று மருத்துவபீடக் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடப் பீடாதிபதி பேராசிரியர் இ. சுரேந்திரகுமாரனைத் தொடர்பு கொண்டபோது, இந்தச் சம்பவம் நடந்ததை உறுதிப்படுத்தினார்.

இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குக் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், அதற்கான பதில் கிடைத்தபின்னரே மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மருத்துவபீடத்துக்குத் தெரிவாவது பல மாணவர்களின் கனவாக இருக்கும் நிலையில், அதற்கான கடும் பிரயத்தனங்களை அவர்கள் மேற்கொள்வது வழமை. ஆயினும் பலத்த போட்டிக்கு மத்தியில் சிலரே மருத்துவபீடத்துக்குத் தெரிவாகும் வாய்ப்பைப் பெறுகின்றனர். அவ்வாறிக்கையில் குறித்த யுவதி எவ்விதமான ஆவணங்களோ, அடையாள அட்டையோ இன்றி, யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடத்தில் கல்விகற்றுள்ளமை தொடர்பில் பெற்றோர் அதிர்ச்சியையும், விசனத்தையு வெளியிட்டுள்ளனர்.

*(மேலதிக விடயங்கள் பட்சியில்)*

(அ-எ-இ)

## ஓய்வூதிய...

மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நாடாளுமன்ற ஓய்வூதியங்கள் (இரத்து) சட்டவரைவு கடந்த 7 ஆம் திகதி நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்தச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டால், முன்னாள் மற்றும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதிய உரிமைகள் முற்றாக இல்லாது செய்யப்படும்.

இந்தநிலையில், 2004 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகித்த எம்.எம். பிரேமசிறி, நவரத்ன பண்டார, நிஷாந்த [illegible] குணசேகர மற்றும் [illegible]சிறி ஹேரத் ஆகியோரால் அந்த சட்டவரைவைச் சவாலுக்குட்படுத்தி மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம், 1988 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த பியசோம உபாலி மற்றும் 1988 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை பணியாற்றிய உபாலி சரத் டன்ஸ்டன் அமரசிறி ஆகியோரால் மற்றுமொரு மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5 முதல் 35 ஆண்டுகள் வரை தமது முழு வாழ்வையும் பொதுச் சேவைக்காக அர்ப்பணித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்த ஓய்வூதியத்தை மட்டுமே வாழ்வாதாரமாக நம்பியுள்ளனர்.

ஓய்வுபெற்ற உறுப்பினர்களும் சில மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனைவிமாரும் தமக்குக் கிடைக்கும் சுமார் 60 ஆயிரம் முதல் 80 ஆயிரம் ரூபா வரையிலான ஓய்வூதியத்தை வைத்தே மருத்துவ மற்றும் அடிப்படைச் செலவுகளைக் கவனித்து வருகின்றனர். இந்தத் தொகை தற்போதைய நிலையில் போதுமானதல்ல.

இந்த சட்டவரைவு அரசமைப்புக்கு முரணானது என்பதால், அதை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மற்றும் மக்களின் அங்கீகாரத்தைப் பெற 'சர்வஜன வாக்கெடுப்பு' அவசியம் என அறிவிக்க வேண்டும் என்று அவர்கள் அந்த மனுக்களில் கோரியுள்ளனர்.

சட்டத்தரணி சனத் விஜேவர்த்தன ஊடாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுக்கள் மீதான வாதங்களை ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ச முன்வைக்கவுள்ளார். (அ-எ-இ)

## விபத்தில்...

முச்சக்கர வண்டியோன்றுமேவிபத்துக்குள்ளாகியுள்ளன. விபத்தில் காயமடைந்த நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-27)

## கல்விச்...

சென்ற அமைச்சர் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு ஊடகங்களுக்கு அமைச்சர் தெரிவித்ததாவது:-

கல்விச் சீர்திருத்தங்கள் நீண்ட காலமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனால் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த எமது அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தரம் 6 பாடநூலில் ஏற்பட்ட ஒரு சிறு தவறால் அதை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனினும் அந்தத் தவறுகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எதிர்க்கட்சிகள் கூறுவதைப் போன்று வேறு எந்தவொரு தவறான விடயங்களும் பாடநூலில் உள்ளடக்கப்படவில்லை. அதை நன்கு அறிந்த தரப்பினரால் இந்த சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியிடம் கடிதம் மூலமும் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள்ளது. தவறுகள் காணப்படுமாயின் அவற்றை திருத்திக் கொண்டு கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த நாம் தயாராகவுள்ளோம் - என்றார்.

(அ-எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விபத்தில் மூதாட்டி பலி




யாழ்ப்பாணம், ஜன.19
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்பாக நடத்த விபத்தில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்து நேற்று நடந்துள்ளது. வீதியை கடக்க முயன்ற மூதாட்டி, முச்சக்கர வண்டி மோதிப் படுகாயமடைந்துள்ளார். அவர் மருத்துவனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் உயிரிழந்துள்ளார். இந்த விபத்துத் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-27)

**மணல் விற்பனை/ பொமிட் போட்டு தரப்படும்.**

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற பூச்சு மணல் விற்பனைக்கு உண்டு.
யாழ். மாவட்டத்திற்கு 65,000 இருந்து...
மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.

தொடர்புகளுக்கு
**076 324 9977**

(CS 31042) GD

## மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 05 . 1936
மறைவு 17 . 01 . 2026

### காசிராஜா மகேஸ்வரி

நீர்வேலியை பிறப்பிடமாகவும், நல்லூர் சங்கிலியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட காசிராஜா மகேஸ்வரி கடந்த 17.01.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மகளும், கந்தசாமி - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற காசிராஜாவின் அன்பு மனைவியும், கபிலன், ரவி, நந்தினி, யோகேஸ்வரன் (ரகு) ஆகியோரின் அன்பு தாயாரும், கலாறஜினி, ராஜி, சந்திரநாதன், உதயா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கனகம்மா அவர்களின் சகோதரியும், மனோரஞ்சிதம், தர்மராஜா ஆகியோரின் மைத்துனியும், பிரபன், பிரணவி, கஜனி, டிரூபன், சாந்து, பிறித்தன், சஸ்கியா, பாபியான், யுகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
(CS 31043) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 12 . 1948
மறைவு 18 . 01 . 2026

### பத்மநாபசர்மா விமலா


குடியிருப்பு சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட விமலா அம்மா (மாலா) அவர்கள் நேற்று (18.01.2026) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியக் குருக்கள் மீனாம்பாள் அம்மாவின் மகளும், சுருவில் நடராஜக் குருக்கள் யோகாம்பாளின் மருமகளும், அமரர் பத்மநாபசர்மா (வெளிக்கள உத்தியோகத்தர், மலேரியா தடுப்பு இயக்கம்) அவர்களின் மனைவியும், மட்டக்களப்பு சரவணபவானந்த சர்மாவின் சகோதரியும், விமலநாதசர்மா (கணக்காளர், செட்டிக்குளம் பிரதேச செயலகம்), பாஸ்கரசர்மா (சுவிஸ்), பத்மஜா (அதிபர், யா/கல்வியங்காடு இ.த.க.பாடசாலை), சைலஜா (பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும், ரவிக்குருக்கள், யோகரஞ்சசர்மா, உமாமகேஸ்வரி, கோமதியின் அன்பு மாமியாரும், அனந்தராம், சம்யுக்தா, சாயினி, சந்தோஸ்சர்மா, சனாதனசர்மா, ஜனார்த்தனசர்மா, ஜனவத்ஸசர்மா, யதுநந்தனசர்மா, பிரவீனசர்மா, விதுஷணி, விஷாலினி, விலக்ஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2026) செவ்வாய்க்கிழமை இல.52, கடையியற்சுவாமி வீதி, நீராவியடியில் உள்ள அவரது இல்லத்தல் நடைபெற்று, முற்பகல் 11.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**இல.52, கடையியற்சுவாமி**
**கோவில் வீதி, நீராவியடி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 6577 446**
**077 200 7570**
(CS 31045) A

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 03 . 1943
மறைவு 18 . 01 . 2026

### துரைராசா யோகநாதன்

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும், இல.29, அம்பாள் வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா யோகநாதன் அவர்கள் நேற்று (18.01.2026) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராசா - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானசௌந்தரியின் அன்புக் கணவரும், கிரிதரன் (HNB - Nelliyady Branch), கிரிசாந்தி, பாலகுமார் (HNB- வட பிராந்திய காரியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரணித்தா (ஆசிரியர், யா/ ஒஸ்மானியா கல்லூரி), நவநீதன், யமுனா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - தென்மராட்சி பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், விபிசஜன், நிர்த்திகா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான ராசதுரை, பரமேஸ்வரி, நேசம்மா, சண்முகநாதன் மற்றும் சோமசுந்தரம், தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சத்தியசீலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2026) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு இல.29, அம்பாள் வீதி, கொக்குவில் மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**இல.29, அம்பாள் வீதி,**
**கொக்குவில் மேற்கு.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 4001 881**
**077 6147 133**
(CS 31032) A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.